RESEARCH ARTICLE

E-Journal of Social Work 2022 - 6 (1): 20-35

3

# Participation of the Youth in Formal Tertiary Education: Researching the Factors and the Trends influencing in it

## முறைசார் மூன்றாம் நிலை கல்வியில் இளைஞர்களின் பங்கேற்பு : செல்வாக்கு செலுத்தும் காரணிகள

T. Tharshan

*Training Officer, Training Division, National Institute of Social Development, Sri Lanka.*

**Abstract:** Tertiary education is different from the general education and the basic education, but on the other hand, it is related to the conferences on researches and knowledge sharing. Therefore, tertiary education is being provided formally and informally by both government and non-governmental institutions. Even though free education is provided in Sri Lanka not everyone, get access to equality education in the tertiary educational level. A limited number of students getting selected to the state universities based on the Z.Scores , comparing the standard of the private degrees to the government degrees the government degrees are given higher worth to, the society's perspective towards the private degrees , the delay in obtaining a degree from a state university , lack of personal interest ,gaps between the job market and the tertiary education ,inadequacy regarding the tertiary education , As a result of this, the lack of interest to perceive tertiary level education among the youth has become a matter of discussion in the Thenmarachi educational zone. Based on the primary and secondary data and Pourposive sampling data Collection was done. Research was done from the findings that was gathered from 14 youngsters who were selected for an in – depth interview, 5 service providers and primary data givers – Key informers. As a result of the study It was found ,the amount of men qualifying on the ordinary level examinations and attending tuitions for the advanced level to perceive tertiary education is low compared to the women also not completing the external degrees on the assigned time duration , lack of recognition given or the external and private degrees , the excessive course fees required to perceive a private degree , financial crisis and the lack of skills in the field related are the reasons that has led as a challenge to find proper job opportunities for the youngsters. Also in government job sector more than male, women are more likely to have obtained tertiary education. In the provincial workforce, contribution of women (61.6 %) is higher than men (38.4 %). During the research, it is proven that youths are facing challenges when obtaining tertiary education, while continuing tertiary education and even after completing tertiary education. Therefore, through social work intervention by providing intervention on each social work levels on youth, family, peer groups, organizations, conducting awareness and guidance in the societal levels, the youngsters can be motivated to increase their interest in entering to the tertiary level education and also lecturers attitude in handling the students, preparing the workers in the companies and giving promotions for the employees based on their tertiary level qualification will encourage the youth more to perceive their tertiary level education.

**Key words:** **Participation, Youths, Formal Tertiary Education, Factors, Trends**

**ஆய்வுச் சுருக்கம்:** மூன்றாம் நிலை கல்வி என்பது பொதுக்கல்வி மற்றும் அடிப்படை கல்வியிலிருந்து மாறுபடுவதுடன் ஆய்வுகள் மற்றும் அறிவு பகிர்விற்கான மாநாடுகள், பயிற்சிகள் என்பவற்றுடன் தொடர்புடையாக கருதப்படுகிறது. முறைசார் மூன்றாம் நிலை கல்வியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் அனைவருக்கும் கிடைப்பதில்லை. அரச பல்கலைக்கழகங்களுக்கு க.பொ.த உயர்தர பரீட்சையின் வெட்டுப்புள்ளி அடிப்படையில் மூன்றாம் நிலை கல்விக்கான சந்தர்ப்பம் மட்டுப்படுத்தப்பட்டவர்களுக்கு அனுமதி வழங்கப்படுதல், தனியார் பல்கலைக்கழகங்களின்

தரம் தொடர்பாகவும் வழங்கப்படும் பட்டங்கள் தொடர்பாகவும் சமூகத்தில் காணப்படும் மனோநிலை, அரச உயர்கல்வி நிறுவனங்களில் வழங்கப்படும் பட்டங்களோடு ஒப்பிடும் போது அரச பல்கலைக்கழக பட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுதல், அரச பல்கலைக்கழகங்களில் உரிய காலப்பகுதியில் பட்டங்களை நிறைவு செய்யமுடியாமை, தனிப்பட்ட ஆர்வமின்மை, தொழில் சந்தைக்கும் மூன்றாம் நிலை கல்விக்கும் இடையிலான இடைவெளி, மூன்றாம் நிலை கல்வி தொடர்பான போதிய அறிவு இன்மை, போதுமான வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வசதிகள் கிடைக்காமை போன்றன மூன்றாம் நிலை கல்வியில் இளைஞர்களின் பங்கேற்பினை சவால்களுக்குள்ளாகின்றன. இதன் விளைவாக மூன்றாம் நிலை கல்வியில் இளைஞர்களின் பங்கேற்பு போதுமானதாக உணரப்படாததனால் மூன்றாம் நிலை கல்வியில் இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தென்மராட்சி கல்வி வலயத்திற்குள் ஆய்வு பொருண்மையாக கருத்தப்பட்டு இரண்டாம் நிலை மற்றும் முதலாம் நிலை தரவுகளை அடிப்படையாக கொண்டு நோக்க மாதிரி எடுப்பு மூலம் அவதானம், 14 இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு ஆழ்ந்த நேர்முக தேர்வு, 05 சேவை வழங்குனர்களிடம் முதன்மை தகவல் தருநர்களிடம் தரவுகள் திரட்டப்பட்டு பகுப்பாய்வுக்குட்படுத்துவதன் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவுகளாக மூன்றாம் நிலை கல்வியில் ஆண்களின் பங்கேற்பை காட்டிலும் அதிகரித்திருத்தல், க.பொ.த சாதாரணதர பரீட்சை பெறுபேறுகளின் மூலம் க.பொ.த உயர்தர வகுப்புக்களுக்கு ஆண்களைவிட பெண்களின் பங்கேற்பு அதிகரித்திருப்பதன் காரணமாக மூன்றாம் நிலை கல்வியிலும் பெண்களின் பங்கேற்பு அதிகரித்திருத்தல், வெளிவாரி கற்கை நெறிகளினை உள்ளூர் அரச பல்கலைக்கழகங்கள் குறிப்பிட்ட காலத்தில் நிறைவு செய்யாமல் இருத்தல், சமூகமட்டத்தில் வெளிவாரிகற்கைகள் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழக பட்டங்களுக்கு அந்தஸ்த்து இல்லாமல் இருத்தல், தனியார் பல்கலைக்கழகங்களின் அதிகரித்த கற்கைநெறி கட்டணம், ஆங்கில அறிவு தேர்ச்சி போதாமை, பல்கலைக்கழக கலைத்திட்டங்கள் காலத்திற்கு ஏற்ப மாற்றம் செய்யப்படாமை, தொழில்துறை அனுபவங்களை மூன்றாம் நிலை கல்வியை தொடரும் காலத்தில் பெற்றுக்கொள்ளாமை, பொருளாதார நெருக்கடிகள், அறிகையல்லாத திறன்களின் தேர்ச்சி போதாமை போன்றவை இளைஞர்கள் மூன்றாம்நிலை கல்வியின் பங்கேற்பில் எதிர்கொள்வது ஆய்வின் மூலம் உறுதியாகிறது. ஆகவே சமூகப்பணி தலையீட்டின் மூலம் இளைஞர், குடும்ப, நண்பர்கள், நிறுவன, சமூக மட்டங்களில் போதிய விழிப்புணர்வுகளையும் வழிகாட்டல் சேவைகளை சமூகப்பணியின் வெவ்வேறு மட்டங்களில் வழங்குவதன் மூலம் இளைஞர்களுக்கான மூன்றாம் நிலை கல்விக்கான ஆர்வங்களை அதிகரிக்க இயலுமாக இருப்பதுடன் கல்வி நிறுவனங்களின் கலைத்திட்டங்கள், விரிவுரையாளர்களின் அணுகுமுறை, தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்களை தயார்படுத்தல் மற்றும் தொழிலாளர்களுக்கான உள்ளேற்பு மற்றும் பதவி உயர்வு செயன்முறைகளில் மூன்றாம் நிலை கல்விக்கான முக்கியதத்துவத்தை அதிகரிப்பதன் மூலம் இளைஞர்களின் முறைசார் மூன்றாம் நிலை கல்விக்கான வாயப்புக்களை மேம்படுத்த இயலுமாக இருக்கும்.

**திறவுச்சொற்கள்:பங்குபற்றல், இளைஞர்கள், முறைசார் முள்றாம் நிலை கல்வி, காரணிகள், வாய்ப்புகள்**

## அறிமுகம்

கல்வியானது ஒருவனது உள்ளத்தையும் அறிவினையும் பண்படுத்தும் மாபெரும் சக்தி எனலாம். அதனால் தான் நெல்சன் மண்டேலா "உலகை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்த ஆயுதம் கல்வி" என குறிப்பிட்டார் (Mehmet,2019). இலங்கையில் கல்வியானது ஆரம்பத்தில் குருகுலக்கல்வியாகவே காணப்பட்டதுடன் கல்வியை பெற்றுக்கொள்வதில் பல மட்டுப்பாடுகள் வரையறுக்கப்பட்டிருந்தது. எனினும் இலங்கை காலணித்துவ ஆட்சிக்குட்பட்டபோது தமது மதம் மற்றும் மொழி, கலாசாரங்களை பரப்புவதற்கான கருவியாக கல்வியை ஆட்சியாளர்கள் பயன்படுத்தியிருந்தனர் (Ranaweera,2021). குறிப்பாக ஐரோப்பியர், ஆங்கிலேயர், ஒல்லாந்தர் வருகையின் பின்னரே கல்வியின் பரம்பல் ஏற்பட்டதை அவதானிக்க முடியுமாகவுள்ளது (Ramesh & Mitali, 2020). ஐக்கியநாடுகள் அமைப்பு சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் 1948ம் ஆண்டு 6ம் உறுப்புரை மூலம் கல்வியை மனித உரிமையாக பிரகடனப்படுத்துவதற்கு முன்னரே இலங்கையில் 1939ம் ஆண்டு கட்டாய கல்விச்சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது (தனராஜ், 2010). இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட இலவசக்கல்வி முறையே வாழ்க்கைதர விருத்தியை மேம்படுத்தியது எனலாம் (Oketch et.al. , 2014). எனினும் மூன்றாம் நிலை கல்விக்கான வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதே இன்றுவரை இலங்கையில் இளைஞர் யுவதிகளுக்கு சவால்நிறைந்த ஒன்றாகவே உணரப்படுகிறது.

## ஆய்வுப் பின்னணி

புதிய சூழலுக்கு ஏற்ப சுறுசுறுப்பாக செயற்படவும் தம்மை மாற்றிக்கொள்ளவும் நிறுவனங்கள் தயார்நிலையில் உள்ள நிலையில் அமெரிக்காவின் கல்லூரிகள் தேவைக்கு ஏற்ற உயர் கல்வியை வழங்குவதற்கு நீண்ட செலவுகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகின்றன (Phylis, 2018). அமெரிக்க மாநிலங்களினால் கல்விக்கான நிதி குறைப்பு, தனியார் உயர்கல்வியில் முதலீடு செய்வதனால் கற்கைநெறிகளுக்கான கட்டண உயர்வு, கல்வி செயற்பாட்டிற்கு போதுமான கல்வியலாளர்கள் நியமிக்கப்படாமை, நிதி கடனுடனே மாணவர்கள் பட்டம் பெறுகின்ற நிலை, மாணவர் இடைவிலகல் அதிகரித்தல், வேலைவாய்ப்பு இன்மை, என்பன விவசாயத்திற்கான உயர்கல்வியினை மேம்படுத்துவதில் நெருக்கடிகளாக எதிர்நோக்கப்படுகிறது (Bryan,2019). சீனா போன்ற நாடுகளில் உயர்கல்விக்கான சேர்க்கையில் சமத்துவமின்மை, வேலைவாய்ப்பு போன்றவற்றில் குடும்ப பின்னணி பங்களிப்பதுடன் கல்வியின் தவளைப்பாய்ச்சல் விரிவாக்கத்தில் காகித கல்விமுறை முறைமை பயிற்சிகல்வியாகவும் பிரயோகமாகவும் மாற்றமடைவதில் காணப்படும் வேகம் மற்றும் நடைமுறை சவால்கள், சலுகை பெற்ற சிலருக்கு மாத்திரம் உயர்கல்வி வாய்ப்பு, கற்பித்தல் தரம், விடுதி வசதிகள், மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர் எண்ணிக்கை பேணப்படாமை, மொழி தேர்ச்சி, கணணி அறிவு, மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆய்வு கூட வசதிகள் இன்மை, உட்கட்டமைப்பு வசதிகளின் போதாமை, சந்தை வாய்ப்பிற்கு ஏற்ப கல்வி முறைமை இல்லாமை, சீன தேசிய உதவுத்தொகையை அதிகரிப்பதில் உள்ள இடர்பாடுகள், கல்வி கட்டணங்களின் உயர்வு தரமற்ற நிறுவனங்கள் உயர்கல்வியை வழங்குவதால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களை அடையாளப்படுத்துவதில் சிரமப்படுதல், போன்றன சீனாவில் முறைசார் மூன்றாம் நிலை கல்வி ரீதியான சவால்கள் எதிர்கொள்ளப்படுகின்றன (David , 2004: Funan Cai, 2017). அவுஸ்ரேலியாவில் உயர்கல்வியினை பெற்றுக்கொள்வதில் மொழிரீதியான

சவால்கள், தொழில்நுட்ப ரீதியான சவால்கள், கலாசார சமூக ரீதியான ஈடுபாடு, குடும்ப ரீதியான ஆதரவு, வீட்டு வசதிகள் இன்மை, பொருளாதார ரீதியான நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர் (Alzahrani & Sarharn, 2019). ஆரம்பகாலத்தில் இந்தியாவில் கல்வி என்பது தனியாருடைய நாட்டமாக கருதப்பட்டிருந்தாலும் இடைப்பட்ட காலத்தில் சமூக பொருளாதார தகுதியாகப் போற்றப்பட்டது (Sheikh,2017). இலங்கையின் மூன்றாம் நிலை கல்வியை பொறுத்தவரை வகுப்பறைகளின் அளவு மற்றும் தரம், தங்குமிடம், உணவு மற்றும் ஊட்டச்சத்து, விடுமுறை நாட்களில் உணவுகளை பெற்றுக்கொள்வதில் நெருக்கடிகள், விடுதிகளில் சமைப்பதற்கான வசதிகள் இன்மை, நூலகவசதிகள், நிதியுதவி, கற்பித்தல் மொழி மூலம், மலசலகூட வசதிகளை பயன்படுத்துவதில் சிரமம், சிற்றுண்டிசாலைகளின் இட வசதி, ஆசிரிய மற்றும் மாணவர் உறவு போன்றவற்றின் மூலம் மாணவர்கள் பல்கலைக்கழக கல்வியை பெற்றுக் கொள்வதில் சிரமப்படுகின்ற நிலை காணப்படுகிறது. இதன் விளைவாக வீட்டில் இருந்து பல்கலைக்கழகம் கற்பதற்கு வருபவர்கள் பல்கலைக்கழக சூழலில் ஆர்வம் இல்லாததாக உணருதல், மேலதிகமான தொழில்வாண்மை கற்கைகளை தொடரமுடியாமை, ஆங்கில மற்றும் தொழில்நுட்ப அறிவினை பெற்றுக்கொள்ள நேரமின்மை, அறிவினை வீடுகளில் மேம்படுத்துவதற்கான தேவைப்பாடு அற்றிருத்தல், இணைபாடவிதமான செயற்பாடுகளில் ஈடுபட முடியாமை, ஒப்படைகள் மற்றும் பரீட்சைகளில் சிறந்த முன்னேற்றத்தை காட்டாமை, கல்விக்காக குறைந்த நேரத்தை செலவிடுதல் போன்ற சவால்களை எதிர்கொள்கின்றனர் (Nithiyaluxmy,2007).

## ஆய்வுப் பிரச்சினை

முறைசார் மூன்றாம் நிலை கல்வியானது வாழ்க்கைதரத்தை மேம்படுத்துவதுடன் ஆயுள் எதிர்பார்ப்பு வீதம் அதிகரிப்பு, தனிநபர் சுகாதாரம், குடும்ப இனவிருத்தி கட்டுப்பாடு, குடும்ப அபிவிருத்தி திட்டமிடல் போன்ற தனிநபர் நன்மைகளை உருவாக்குகிறது (Oketch. et al., 2014). மூன்றாம் நிலை கல்வியை உரியவகையில் பெற்றுக்கொள்வதன் மூலமே தொழிலிற்கு ஏற்ற திறனுள்ளவர்களை உருவாக்க முடியுமாக இருப்பினும் பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்யும் பட்டதாரிகள் வேலைவாய்ப்பு தன்மைக்கு பொருத்தமற்ற திறன்கள், பொருத்தமற்ற கல்வி, குறைந்த ஆங்கில அறிவு, தொழில்நுட்ப அறிவு இன்மை, போதுமான பயிற்சிகள் இன்மையும் தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்வதில் சவால்கள் நிறைந்தவையாக உள்ளன (Weerasiri & Samaraweera ,2021). மூன்றாம் நிலைக்கல்வியை தொடரமுடியாமல் வேலைவாய்ப்பில் ஈடுபடுபவர்கள் விழுமியமற்ற பொருளாதார சேமிப்பு, எதிர்கால ஆளணியை தயார்செய்தலில் சிரமங்கள், சர்வதேச பொருளாதார சந்தைக்கு ஏற்ற வகையில் தொழிலாளர் தரத்தினை பேண முடியாமை, விருப்பத்திற்கு ஏற்ற தொழில்வாய்ப்புக்களை தெரிவு செய்யாமை, அதிகளவு வருமானத்தை ஈட்ட முடியாமை, உயர் தொழில்களில் கிடைக்கும் சலுகைகளினை அனுபவிக்கமுடியாமை, தொழில் திருப்தியின்மை, சமூகத்தின் கல்வி தரம் அதிகரிக்க முடியாமை, பொருளாதார நிலைத்திருக்கும் தன்மையற்றிருத்தல், குற்றச்செயல்களை கட்டுப்படுத்த முடியாமை, பாலினபுரிதலற்ற நிலை, தொழில்வாண்மை தேர்ச்சி தன்மையை கொண்டிராமை போன்ற பிரச்சினைகளை எதிர்கொண்ட வண்ணம் உள்ளனர் (Gunawardena,2017). கல்வியறிவு, பயிற்சி என்பது இளைஞர்களை தொழிலாளர் சந்தையில் விற்பனை செய்வதற்கு அவசியமாகிறது (Verite Research ,2020). பாடசாலை கல்வி திட்டத்தில் ஆங்கில கல்விக்கு முக்கியதத்துவம் வழங்காமல் இருப்பதனால்

உயர் கல்வி வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதில் நெருக்கடிகள், பொருளாதார நெருக்கடிகள் போன்றவற்றை தாண்டியே தொழில்வாய்ப்பினை பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்படுகிறது (Gunatilaka et al , 2010). குறிப்பிட்ட ஆய்வுப் பிரதேசத்தில் இளையோர் மூன்றாம் நிலை கல்வியில் இளைஞர்களின் பங்கேற்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும் அவற்றினால் ஏற்படும் சவால்கள் பற்றியும் ஆராயவேண்டும்.

### பிரதான நோக்கம்

முறைசார் மூன்றாம்நிலை கல்வியில் இளைஞர்களின் பங்கேற்பில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் மற்றும் போக்குகளினை மீளாய்வு செய்தல்.

### ஆய்வின் நோக்கம்

1. முறைசார் மூன்றாம் நிலை கல்வி இளையோரின் பங்கேற்பில் செல்வாக்கு செலுத்தும் காரணங்களை இனங்காணல்.
2. முறைசார் மூன்றாம் நிலை கல்வி இளையோரின் பங்கேற்பில் எதிர்நோக்கும் சவால்களை மதிப்பீடு செய்தல்.
3. முறைசார் மூன்றாம் நிலை கல்வி இளையோரின் பங்கேற்பின் போக்கினை விபரிக்குக.
4. முறைசார் மூன்றாம் நிலை கல்வியில் சமூகப்பணியின் பங்கேற்புகளை அடையாளப்படுத்துதல்.

### ஆய்வு வினா

1. முறைசார் மூன்றாம் நிலை கல்வி இளையோரின் பங்கேற்பில் செல்வாக்கு செலுத்தும் காரணங்கள் எவை?


3. முறைசார் மூன்றாம் நிலை கல்வி இளையோரின் பங்கேற்பில் எதிர்நோக்கும் சவால்களை எவ்வாறானவை?
4. முறைசார் மூன்றாம் நிலை கல்வி இளையோரின் பங்கேற்பின் போக்கு எவ்வாறுள்ளது?.
5. முறைசார் மூன்றாம் நிலை கல்வியில் சமூகப்பணியின் பங்கேற்புகள் எவை?

## இலக்கிய மீளாய்வு

முறைசார் கல்வியில் இளையோரின் பங்கேற்பு குறைவடைந்து செல்வதற்கான காரணங்கள் எனும் ஆய்விற்குரிய விடயமானது அண்மைக்காலமாக எமது சமூகப்புலத்தில் அதிகரித்து வரும் பொருண்மையாக இனம் காணப்படுகின்றது. எனினும் இவ் விடயம் தொடர்பான அறிவியல் அணுகுமுறைகளை கற்றறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட தேடல்களில் முறைசார் கல்வியில் இளையோரின் பங்கேற்பு தொடர்பான நேரடியான ஆய்வுகள் மட்டுப்படுத்தப்பட்டளவில் காணப்பட்டதுடன் ஆய்வாளனால் தேடியவரையிலும் இலக்கியமீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. முறைமைசார் மற்றும் முறைமைசாரா ஒழுங்குபடுத்தப்படா கற்றலுடைய இணை உறவுகள் எனும் ஆய்வில் முறைசார் கல்வி திட்டத்தில் முறையான கல்வி என்பது ஒழுங்கமைக்கப்பட்ட கல்வி மாதிரிகளான குறிக்கோள்கள், உள்ளடக்கம் மற்றும் வழிமுறைகளை கொண்டிருப்பதுடன் கட்டமைக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின் படி நிர்வகிக்கப்படுகிறதுடன்

ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்வி செயன்முறைகளை கொண்டிருக்கிறது. இதன் மூலம் மாணவர்களிடம் குறைந்த பட்ச வருகை எதிர்பார்க்கப்படுகிறது (Cameron & Harrison,2012).

ஆண் சிறுவர்களின் பங்கேற்பை பாதிக்கும் சமூக காரணிகள் என்ற ஆய்வு ஹென்யாவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குறித்த ஆய்வில் காலணித்துவத்திற்கு முன்னர் பெண் பிள்ளைகளின் கல்வி பெரிய அளவில் இருக்கவில்லை என்பதுடன் சுதந்திரத்திற்கு பின்னர் பாலினத்துவரீதியான அணுகுமுறையினால் பெண் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி அதிகம் காணப்படுவதை சுட்டிக்காட்டுகிறது (Kisiangani et al.,2019). புதிய சகாப்தத்தில் முறையான கல்வி என்ற ஆய்வில் ஐரோப்பாவை பொறுத்தவரை இருபத்தொராம் நூற்றாண்டுக்கான கல்வியை வழங்காதது தொழில் சந்தைக்கும் ஆளணிக்கும் இடையிலான இடைவெளியை தோற்றுவித்துள்ளது. கல்வியில் மாணவர்கள் ஈடுபடுவதற்கான விருப்பங்களுக்கு அமைய கற்றல் முறையை கொண்டிருத்தல் தொழில்நுட்ப கல்வியை வழங்குதல், இணையகல்விக்கான திறன்களை பயிற்றுவித்தல் என்பன கல்வியில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது (Shala & Albulence,2016)



Youth Participation in Treasury formal Education Conceptualized Model
System Theory, Leering Theory, Ecological Theory, Strength Based Approach, Empowerment Based Approach, Antro Job Life Theory, Contingency Approach, Motivational Theory, Synthesize Approach, Behavioral
Motivation & Career Guidance for Youth & family
Youth
A
Condition
Lack of Opportunity
Lack of Interest
Lack of Income
Lack of Awareness
Lack of Family Support
Poor Guidance
Lack of Language Competency
Social Conditions
Decision making of youth Interest
Family Economic Condition
A/L Result
O/L Result
Family Background
Family Educational Level
Family Size
Social Class/Stratification
Language competency
IT Knowledge
Scholarship
Educational Loan
Cultural and Social Value
Peer Presser
JOB Market
Access of Institution
Intake Proces
B
Consultation & Facilitation
University Grant Commission
State University
Knowledge
Skills
Syllabus, Teaching Methodology, Human Resources, Infrastructure Facilities. Lab facilities, Library, Career Guidance Service, Welfare Service, Exam Methods, Soft Skills, Job market, Industrial collaboration, Field Practice, Internship, quality of Education, Language Competence, IT
C
Private /International University
Higher Study Institution
Non State University Division
Mindset
Attitude
Monitoring & Supervision
Pass out Student
No of Graduate increase
Job market & Education Process are Mach
Skills full Graduate
Social Status increase
JOB Market
D
Impact of Graduation
Quality of Employee
Mach of Employment Opportunity
Job Satisfaction Rate Increase
Economic Contribution increase
Innovative thinking High
Social Work Intervention (Social work Skills,Social Work Ethics, Social Work Approach, Social Work Methods)

இளைஞர்கள் மூன்றாம் நிலை கல்வி வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதனால் அவற்றை வெற்றி கொள்வதற்கு பொருத்தமான எண்ணக்கருவுருவாக்க சட்டகம் அவசியமாகிறது.

(A)இளைஞரின் மூன்றாம்நிலை கல்வியை மேம்படுத்துவதற்கு இளைஞர் மூன்றாம் நிலை கல்வி வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதில் காணப்படும் குறைபாடுகளை இனங்கண்டு தனிநபர் ரீதியாகவும், குடும்ப ரீதியாகவும் விழிப்புணர்வு, அறிவூட்டல் மற்றும் பொருத்தமான வழிகாட்டல்களை வழங்கி ஊக்கப்படுத்துவதன் மூலம் இளைஞர்கள் மூன்றாம் நிலை கல்வி தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள வசதிப்படுத்த முடியுமாக இருக்கும்.

(B)மூன்றாம் நிலை கல்வியை தொடருகின்ற இளைஞன் கல்விச்செயற்பாட்டை தொடர்வதற்கான சூழலை ஏற்படுத்தி கொடுப்பதற்கான செயற்பாடுகளையும் இளைஞர்களை சந்தைவாய்ப்பிற்கு ஏற்ப தயார் செய்வதற்குரிய முறையில் நிறுவனங்களின் இயலளவையும் வலுப்படுத்த வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு ஏற்றவாறு உட்கட்டமைப்பு வசதிகள், சமூக நலன்புரி வசதிகள், மனித வள ஆளணி, கலைத்திட்டங்கள், தொழில் சந்தைக்கு ஏற்ற திறன்களை பல்கலைக்கழகங்கள் விருத்தி செய்வதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் வழங்க வேண்டும்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச உயர்கல்வி நிறுவனங்கள் அரசசாரா பட்டம் வழங்கும் நிறுவனங்களின் மூன்றாம் நிலை கல்வி வழங்கலுக்கான தரத்தை மதிப்பீடு செய்வதுடன் அத்தகைய பட்டங்கள் இலங்கைக்கு பொருத்தமான வகையில் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளதா என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்பதுடன் அரசு அல்லாத பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளை கண்காணிக்கவும் உரிய காலப்பகுதியில் பொருத்தமான அறிக்கைகளை பெற்றுக்கொள்வதையும் அரசார்பற்ற பல்கலைக்கழக பிரிவுகள் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுதி செய்தல் வேண்டும்.

பல்கலைக்கழகங்கள் தொழில்துறை நிறுவனங்களுடன் கூட்டு உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதன் மூலம் மாணவர்களின் கல்விக்கான புலமைப்பரிசில்கள் மற்றும் மாணவர்கள் கற்றல் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தொழில் மற்றும் களப்பயிற்சிகளை பெற்றுக்கொள்ள வாய்ப்பு வழங்குவதுடன் மூன்றாம் நிலை கல்விக்குரிய பாடத்திட்டங்களை காலத்திற்கு பொருத்தமாக தயார் செய்திருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

மூன்றாம் நிலை கல்வியை மேற்கொள்வதற்கான இணைசேவைகளான கடன்கள், பலமைபரிசில்கள், பகுதி நேர வேலைவாய்ப்பு, பகல் நேர குழந்தைகள் பராமரிப்பு நிலையம் போன்ற செயற்றிட்டங்களை உயர்கல்வி நிலையங்களில் நடைமுறைப்படுத்துவதன் மூலமும் இளைஞர்களின் பங்களிப்பை அதிகரிக்க முடியும்.

(C)அவ்வாறே மூன்றாம் நிலை கல்வியை நிறைவு செய்தவர்கள் பொருத்தமான தொழில்துறைகளில் பங்கேற்பதற்கான சூழலையும் சந்தர்ப்பத்தையும் தொழில்வழங்கும் நிறுவனங்கள் மத்தியில் உருவாக்க இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் தொழில்துறைக்கு ஏற்ற மனித வளஆளணியையும் கல்வி துறைக்கு ஏற்ப தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்க முடியும்.

இளைஞர் மூன்றாம் நிலை கல்விக்குள் நுழைவதற்கு முன்னரும் கற்றல் செயன்முறையின் போதும் தொழில் சந்தைக்கு விடுவிக்கப்படுகின்ற போதும் இளைஞர்களுக்கு தேவையான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் மேற்கொள்ளப்படுவதற்கான வசதி காணப்படுதல் வேண்டும்.

## ஆய்வு முறையியல்

விபரிப்பு ஆய்வு வடிவமைப்பு ஆனது பயன்படுத்தப்படுத்தப்படுவதுடன் முதலாம்நிலை மற்றும் இரண்டாம் நிலை தகவல்கள் திரட்டப்பட்டது முதலாம்நிலை தகவலானது பண்புசார் தரவுதிரட்டல் மூலம் தரவு திரட்டல் கருவிகளாக அவதானம், பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட நேர்காணல், பிரதான தகவல் தருநர் மூலம் தகவல் திரட்டப்பட்டது. நிகழ்தகவற்ற மாதிரி வகையில் நோக்க மாதிரி எடுப்பு முறை மூலம் 14 இளைஞர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலமும் 5 பிரதான தகவல் தருநர்களிடமும் தரவுகள் திரட்டப்பட்டதுடன் இரண்டாம் நிலை தகவல்களாக புள்ளிவிபரங்கள் ஆண்டறிக்கைகள் புத்தகங்கள் சஞ்சிகைகள் பத்திரிகைகள் போன்றவற்றில் இருந்து தரவு திரட்டப்பட்டது. தரவு பகுப்பாய்வானது அளவுசார் தரவுகள் புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்கும் பண்புசார் தரவுகள் கருத்தியல் பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டது

## கண்டுபிடிப்புக்களும் கலந்துரையாடலும்

### கல்வி மட்டங்களுக்கு ஏற்ப வேலைவாய்ப்பு இன்மை

| Level of Education | Sri Lanka | Unemployment Rate | | |
|---|---|---|---|---|
| | Number | Sri Lanka (%) | Male (%) | Female (%) |
| Sri Lanka | 483172 | 5.7% | 3.7% | 9.6% |
| Below GCE O/L | 170784 | 3.4% | 2.7% | 5.4% |
| GCE O/L | 108584 | 7.2% | 5.2% | 11.1% |
| GCE A/L and Above | 203804 | 10.1% | 5.5% | 14.7% |

**(Source: Deparment of census & Statistics, 2020)**

க.பொ.த உயர்தரத்தரம் மற்றும் க.பொ.த உயர்தரத்திற்கு மேல் கற்ற ஆண்களுடன் ஒப்பிடும் பொழுது அதிகமான பெண்களே சதவீதத்தில் வேலைவாய்ப்பின்மை பிரச்சினையை எதிர்கொள்வதுடன் மூன்றாம் நிலை கல்வியில் பெண்களின் பங்கேற்பு அதிகரித்திருப்பதுடன் க.பொ.த உயர்தரத்திற்கு மேல் கற்றவர்களில் அதிகமானவர்கள் வேலைவாய்ப்பின்மையை எதிர்கொள்ள காரணமாகும்.

### குடும்ப மற்றும் சமூக சூழலும் ஆதரவும்.

தகப்பன் மதுவிற்கு அடிமையாகின்றதனால் குடும்ப சூழல் பாதிப்படைவதுடன் பிள்ளைகளின் கல்வியையும் பாதிப்படைய செய்கிறது. குடும்பத்தின் பொருளாதாரசூழல் சாதகமாக காணப்படாத

சந்தர்ப்பத்திலும் கல்வி மூலம் குடும்பத்தை மேம்படுத்த வேண்டும் என்ற சுய முயற்சி வலுவாக காணப்பட்டதனால் தனவந்தர்களின் பொருளாதார உதவியுடன் மூன்றாம்நிலை கல்வியை நிறைவு செய்யக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகிறது (களதரவுகள், 2022). மூன்றாம் நிலை கல்வி நடவடிக்கைகளில் பங்கேற்பு செய்வதற்கு (71.42%) அதிக எண்ணிக்கையிலானோருக்கு சமூக ஆதரவு கிடைக்கப்பெறவில்லை என்பதுடன் சமூகத்தின் மத்தியில் மூன்றாம் நிலை கல்வியை முன்னெடுப்பதற்கான அழுத்தங்கள் நேரானதாகவும் மறையானதாகவும் பிரயோயிக்கப்பட்டுள்ளது.

**புலமைப்பரிசில்கள்.**

பதிலளிப்பாளர்களில் (57%) அதிகமானவர்களுக்கு புலமைப்பரிசில் வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் (43%) குறைவானவர்களுக்கு கிடைக்கப்பெறுவதில்லை எனவும் தெரிவித்திருந்தனர். அரச பல்கலைக்கழகங்களில் மூன்றாம் நிலை கல்வியை தொடர க.பொ.த உயர்தர வெட்டுப்புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் பல்கலைக்கழகத்திற்குள் முதன்முதலில் உள்நுழைபவர்களுக்கு மஹாபொல புலமைப்பரிசில் திட்டம் கிடைக்கப்பெறுவதுடன் காத்திருப்போர் பட்டியலில் பல்கலைக்கழக நுழைவை எட்டுபவர்களுக்கு (பேசரி) கல்விக்கான உதவுத்தொகை புலமைப்பரிசில் திட்டம் கிடைக்கப்பெறுகிறது. அரச உயர் கல்வி நிறுவனங்களில் கற்பவர்களில் வறுமைப்பட்ட மட்டுப்படுத்தப்பட்டவர்களுக்கே புலமை பரிசில் திட்டங்கள் வழங்கப்படுகிறது. எனினும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் தொலைதூர கல்வியை மேற்கொள்பவர்கள், இணையவழி கல்வியை மேற்கொள்பவர்கள், உள்நாட்டு பல்கலைக்கழகங்களில் வெளிவாரி கற்கைநெறிகளை மேற்கொள்பவர்களுக்கு எவ்விதமான அரசாங்க புலமைப்பரிசில் திட்டங்களும் வழங்கப்படுவதில்லை. புலமைப்பரிசில் திட்டங்கள் பொருளாதார பின்னடைவுடைய மாணவர்களின் கல்வி செயற்பாடுகளுக்கு போக்குவரத்து, தங்குமிடம், உணவு போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள வாய்ப்பாக அமைகிறதுடன் பெற்றோருக்கு ஏற்படும் பொருளாதார ரீதியான நெருக்குதல்களை ஓரளவுக்கேனும் குறைக்க முடியுமாக உள்ளது.

## தகவல் தொழில்நுட்பம்

மூன்றாம் நிலை கல்வியை மேற்கொண்டவர்களில் (86%) பெரும்பாலோனோரிற்கு தகவல் தொழில்நுட்ப சாதனங்களின் கிடைப்பனவு காணப்பட்டதுடன் (14%) மிக சொற்பளவினரே தகவல் தொடர்பு சாதனங்களின் வசதியை அனுபவிக்க இயலாதவர்களாக காணப்பட்டனர். தகவல் தொழில்நுட்ப சாதனங்களின் கிடைப்பனவினை பெற்றுக்கொண்டவர்கள் Covid-19 அனர்த்த சூழ்நிலை காரணமாக பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டு நிகழ்நிலை கற்றல் செயற்பாடுகள் Zoom தொழில்நுட்பம் ஊடாக மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் கல்வியை தொடர்ந்தவர்களும் உள்ளடங்குகின்றனர். கற்றல் நடவடிக்கைகளை முன் எடுப்பதற்கு (86%) அதிகளவிலானோர் SMART Phone களை பயன்படுத்தி இருந்ததுடன் (64.28%) குறைவானோர் மடிக்கணணிகளை பயன்படுத்தியிருந்ததுடன் (64.28%) Wi-Fi Connecction வைத்திருந்தனர். மடிக்கணணி பயன்படுத்திய அனைவரிடமும் SMART Phone காணப்பட்டதுடன் மடிக்கணணி வைத்திருந்த ஒருவரை தவிர மிகுதி அனைவரிடமும் இணைய இணைப்பிற்கு Wi-fi connection காணப்பட்டது.

**மொழி திறன்**

மூன்றாம் நிலை கல்வியை மேற்கொள்பவர்களின் ஆங்கில மொழி திறன் மட்டம் (42.85%) அதிகமானவர்களுடையது நன்றாக காணப்பட்டதுடன் (7.14%) குறைவான எண்ணிக்கையுடையவர்கள் மிக சாதாரணம் குறைவு போன்ற மட்டங்களை வெளிப்படுத்தியிருந்தனர். வெளிவாரி பாடநெறிகளில் முதலாம் வருடத்தில் ஆங்கில பாடநெறி காணப்படுவதனால் குறித்த பாடத்தை சித்தியடைய மாணவர்கள் அதிகளவு முயற்சிகளை மேற்கொள்வதுடன் விஞ்ஞானதுறைசார் பாடங்களை கற்கும் உள்வாரி மாணவர்கள் விரிவுரைகளை விளங்கிக் கொள்ளவும் பாடக்குறிப்புக்கள் மற்றும் விடயப்பரப்புக்களை விளங்கிக்கொள்ளவும் ஆங்கில அறிவு அவசியமாக காணப்படுகிறது. அது மாத்திரமன்றி தொல்பொருளியல், மொழிபெயர்ப்பு கற்கைநெறிகளுக்கு உள்வாரி மாணவர்கள் வகுப்பு ரீதியான முதன்னிலையை அடைவதற்கு ஆங்கில மொழிபுலமை அவசியமாக காணப்பட்டாலே ஆங்கில பாடத்தில் அதிக புள்ளிகளை பெற்றுக்கொள்ள முடியுமாக உள்ளது.

மூன்றாம் நிலை கல்வியை மேற்கொள்ளுகின்ற (72%) அதிகமானவர்கள் சிங்கள மொழிதிறன் மட்டம் குறைவாகவே காணப்படுவதுடன் (14%) சாதாரண சிங்கள மொழிதிறனையும் சிங்கள மொழி திறனில் (14%) மிக சாதாரண திறனை கொண்டிருப்பவர்கள் கற்ற சூழலின் தாக்கம் மற்றும் விடுதி நண்பர்களின் தாக்கத்திலே சிங்கள மொழியை ஓரளவுக்கு அறிந்து வைத்துள்ளனர். குறிப்பாக தொல்லகழ்வாராய்ச்சி மாணவர்கள் மற்றும் மொழிபெயர்ப்பு மாணவர்களிற்கு வகுப்பின் முதன்நிலையை தீர்மானிப்பதில் சிங்கள மொழி அவசியமாக காணப்படுகிறது.

**தனிநபர் ரீதியான சவால்கள்**

மூன்றாம் நிலை கல்வியில் தனிநபர் சார்ந்த விடயங்களான பால், வயது, கல்வி மட்டம், அனுபவம், வாழ்க்கை முறை, திருமண நிலை போன்றனவும் செல்வாக்கு செலுத்துகிறது. இவ்விடயங்கள் நேரானதாக அமையப்பெற்றால் நேரான விளைவுகளையும் மறையானதாக அமையப்பெற்றால் வேண்டத்தகாத விளைவுகளையும் ஏற்படுத்துகிறது.

## மூன்றாம்நிலை கல்வியில் திருமணத்தின் செல்வாக்கு

இளைஞர் மற்றும் யுவதிகள் திருமணத்தின் பின்னரும் புரிந்துணர்வுள்ள கணவனுடைய துணையுடன் மூன்றாம் நிலை கல்வியை மேற்கொள்ள முடியுமாக இருப்பதுடன் அதிகமான பெண்கள் திருமணத்தின் பின்னர் தங்கள் கல்வியை தொடரமுடியாமல் போகும் என்ற அச்சத்தில் திருமணத்தை தவிர்த்து வருவதுடன் திருமணத்தை தவிர்த்து மூன்றாம் நிலை கல்வியை தொடர்ந்தவர்கள் பொருத்தமான வயதில் திருமணம் மேற்கொள்ள முடியாத சூழலில் சமூகத்தின் கேள்விகணைகளால் கவலையடைவதையும் அவதானிக்கமுடிகிறது. திருமணரீதியான விடயங்கள் நேரடியாக மூன்றாம் நிலை கல்வி வாய்ப்பை நிறுத்தாத போதும் திருமணத்தின் பின்னர் எழக்கூடிய கட்டுப்பாடுகள், பொறுப்புக்களும் வகிபங்கும் மூன்றாம் நிலைகல்வியில் தாக்கம் செலுத்துபவையாக உள்ளன. எனினும் பல்கலைக்கழக நிர்வாகம் இயலுமான சலுகைகளையும் வசதிவாய்ப்புக்களை திருமணம் மேற்கொண்டவர்களுக்கு வழங்கி வருகிறது.

## பொருளாதார ரீதியான சவால்கள்

மூன்றாம் நிலை கல்வியை மேற்கொள்வதில் குடும்ப வருமானம் மற்றும் குடும்ப பொருளாதார பின்னணி செல்வாக்கு செலுத்துவதுடன் பொருளாதார ரீதியாக குறைந்த மட்டத்தில் உள்ள மாணவர்கள் உளரீதியான சவால்களை எதிர்கொண்ட வண்ணமே கல்வியை தொடர்கின்ற நிலை காணப்படுகிறது. மூன்றாம் நிலை கல்வியை தொடர்கின்ற இளைஞர் மற்றும் யுவதிகளின் கல்வி நடவடிக்கைகளுக்கான நிதியை பெற்றோர்கள் தங்கள் சம்பளத்தின் பங்கீட்டில் இருந்து வழங்குவதுடன் மிக குறைவானவர்கள் சகோதரர்களுடைய நிதி ஆதரவையும் தமது சொந்த உழைப்பின் ஒரு பகுதியையும் கல்வி நடவடிக்கைக்கு பயன்படுத்துகின்றனர். எனினும் பெற்றோரின் வருமானத்திற்கும் குடும்ப உறுப்பினர்களில் கற்றுக்கொண்டு இருப்பவர்களுக்குமிடையே எவ்வித இணை தொடர்பு எதுவும் காணப்பட்டிருக்கவில்லை என்பதுடன் வருமானம் குறைவானவர்கள் புலமைப்பரிசில்கள், வெளிநாட்டு உதவிகள், சுயதொழில் போன்றவற்றின் மூலம் மூன்றாம் நிலை கல்வி வாய்ப்புக்களை பயன்படுத்திக்கொள்கின்றனர். பதிலளிப்பாளர்களில் (42.85%) 5000 ருபாவிற்கு குறைவான செலவுகளை மேற்கொள்வதுடன் (42.85%) 5001-10000 ருபா செலவீனங்களை கல்விக்காக மேற்கொள்கின்ற நிலை காணப்படுவதுடன் (14.28%) 10001 ருபாவிற்கும் அதிகமான செலவுகளை மேற்கொள்கின்றனர் அதிகளவு செலவுகளை கல்விக்காக மேற்கொள்பவர்கள் வெளிவாரி மற்றும் தொலைதூர கற்கைநெறிக்கட்டணங்களை செலுத்துகின்ற நிலை காணப்படுகிறது. மூன்றாம்நிலை கல்வியை மேற்கொள்ளுகின்ற இளைஞர்கள் தங்கள் உழைப்பின் ஒருபகுதியை பயன்படுத்துவதுடன் நிகழ்நிலை வகுப்புக்களினால் மாணவர்கள் குறைந்த பொருளாதார செலவுடன் கற்றலை மேற்கொள்ள இயலுமாக உள்ளது. மூன்றாம் நிலை கல்வியை மேற்கொள்பவர்களில் (57.14%) அதிகமானவர்கள் குடும்ப வருமானத்தின் ஒருபகுதியை பயன்படுத்துவதுடன் (7.14%) குறைவானவர்கள் வெளிநாட்டு உதவிகளை பயன்படுத்துகின்றனர். மிக குறைவானவர் ஒன்றுக்கு மேற்பட்ட மூலங்களிலிருந்து கிடைக்கும் உதவிகளை பயன்படுத்தி வருகின்றனர் (களதரவுகள்,2022)

## மூன்றாம் நிலை கல்விக்கான கடன்கள்

மூன்றாம் நிலை கல்வியினை மேற்கொள்வதற்கு (85.71%) முறைசார் கடன்களை யாரும் பெற்றிருக்கவில்லை என்பதுடன் (14.28%) மிக குறைவான எண்ணிக்கையினர் அயலவர்கள் மற்றும் நண்பர்களிடம் முறைசாரா வகையில் கைமாறி கடன்பெற்றிருக்கின்றனர். மூன்றாம் நிலை கல்விக்கான கடன் வழங்குதல் நாட்டின் அனைத்து பாகங்களுக்கும் பரவலாக்கப்படாததனால் வடமாகாணத்தில் வாழும் இளைஞர்கள் போக்குவரத்து சிரமம் சிங்கள மொழி தேர்ச்சியின்மையினால் கல்விக்கான கடன்களை பெறுவதில் சிரமங்களை சந்தித்து வருகின்றன.

**பாடசாலைக்கால நண்பர்கள் மூன்றாம் நிலை கல்வி வாய்ப்பை பெற்றுக்கொள்ள இயலாதற்கான காரணங்கள் (பல்விடை தெரிவு)**

| இல | அபிப்பிராயங்கள் | பதிலளிப்பாளர் |
|---|---|---|
| 01 | திருமணம் செய்தல் | 14.28% |
| 02 | பொருத்தமான வழிகாட்டல் இல்லை | 21.42% |
| 03 | இரண்டாம் நிலை கல்வியை அக்கறையுடன் கற்காதது | 14.28% |
| 04 | கல்வியில் ஆர்வமின்மை | 57.13 % |

| | | |
|---|---|---|
| 05 | மட்டுப்படுத்தப்பட்டமாணவர்களின் பல்கலைக்கழக உள்ளேற்பு | 7.14% |
| 06 | மூன்றாம் நிலை கல்வி அச்சம் | 14.28% |
| 07 | குடும்ப சூழல் ஆரோக்கியமற்று இருத்தல் | 14.28% |
| 08 | காதல்வயப்படுவதனால் கல்வி குழப்பமடைதல் | 7.14% |

**(மூலம்: களதரவு,2022)**

முறைசார் மூன்றாம் நிலை கல்வி வாய்ப்பை பெற்றுக்கொள்ளாதவர்களில் (57.13%) அதிகமானவர்கள் கல்வியில் ஆர்வமின்மையை (7.14%) மிக குறைவானவர்கள் காதல்வயப்படுவதனால் கல்வியில் குழப்பமடைதல் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பல்கலைக்கழக உள்ளேற்புகளால் பங்கேற்பை வெளிக்காட்டியிருக்காத சந்தர்ப்பம் காணப்படுகிறது. மூன்றாம் நிலை கல்வியை மேற்கொள்வதற்கான சுய சிந்தனை மற்றும் விழிப்புணர்வு இளைஞர்கள் மத்தியில் போதியதாக காணப்படாத நிலை இளைஞர்கள் மூன்றாம் நிலை கல்வியில் பங்கேற்பதை மந்தநிலைக்குள்ளாக்கிறது.


### கற்றலுக்கான போக்குவரத்து சார் சவால்கள் (பல்விடை தெரிவு)

போக்குவரத்து சார் சவால்களாக (57.14%) அதிகளவிலானோர் போக்குவரத்தின் போது பஸ்களை குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்வது சிரமம் என்பதுடன் (35.71%) நீண்ட தூரம் பயணம் செய்வது (28.57%) அவ்வாறான தொந்தரவுகள் எதுவுமில்லை எனவும் பதிலளித்தனர். குறுகிய எண்ணிக்கையானோர் புதிய இடத்திற்கு அச்சப்படல், பஸ்சில் எதிர்பாலரினால் காலை சுரண்டல், அருவருக்கத்தக்க தொடுகை, அதிக செலவு, உடல் ஒவ்வாமை, உரிய நேரத்திற்கு பஸ்களை பெற்றுக்கொள்ளல் என்பதில் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். போக்குவரத்து தாமதங்களினால் உரிய பாடங்களை விளங்கிக்கொள்ளல் மற்றும் வகுப்புக்களுக்கு ஒழுங்காக செல்லுதல் போன்ற சிரமங்களை மாணவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர் (களதரவுகள்,2022).


### சமூகப்பணி தலையீட்டு திட்ட மாதிரி

மூன்றாம் நிலை கல்வியில் இளைஞர்களின் பங்கேற்பை அதிகப்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகளை அரசாங்கம், மேற்கொண்டுள்ள போதும் சமூகப்பணியின் வெவ்வேறு மட்டங்களில் வெவ்வேறு சமூகப்பணி முறைமைகளை பயன்படுத்தி சமூகப்பணி தலையீட்டினை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகக் காணப்படுகிறது. மூன்றாம் நிலை கல்வியை வினைத்திறனாக்க மூன்றாம் நிலையை பெற்றுக்கொள்வதற்கான இளைஞர்களை தயார் செய்தல், தொழில்சந்தையை மையப்படுத்திய பயிற்சிகளை வழங்குதல், வளப்பயன்பாட்டை முகாமை செய்வதை வசதிப்படுத்தல், பல்கலைக்கழக வாய்ப்பினை விரிவுபடுத்துதல், வழிகாட்டல் சேவைகளை அதிகரித்தல், கல்வி நிறுவனங்களின் இயலுமையை விருத்தி செய்தல், தொழில்துறைக்கும் கல்வித்துறைக்கும் இடையிலான வலையமைப்பினை உருவாக்குதல், தொழில்துறைக்கு பொருத்தமான மூன்றாம் நிலை கல்வி வழங்கலை உறுதி செய்தல், உள சமூக ஆதரவு வசதிப்படுத்தலை மேற்கொள்ளல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடனான உறவை உயர்கல்வி நிறுவனங்கள் பேணுதல், கொள்கைரீதியான உள்ளேற்புகளை மேற்கொள்ளல், ஆய்வு மற்றும் மாநாடுகளை மேற்கொள்ளல் போன்ற சமூகப்பணி செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகிறது.

# சமூகப்பணி தலையீட்டு திட்ட மாதிரி



## சமூகப்பணி தலையீட்டு திட்டம்




**இளைஞர்**

இளைஞர்களுக்கான முறைசார் மூன்றாம் நிலை கல்விசார் விழிப்புணர்வையும் ஊக்கப்படுத்தலையும் வழங்குதல். இளைஞர்களின் மொழிபுலமையை வளர்ப்பதற்கான வசதிப்படுத்தலை மேற்கொள்ளல் இளைஞர்களின் மென் திறன்களை விருத்தி செய்ய வசதிப்படுத்தல் இளைஞர்களின் இரண்டாம்நிலை கல்விக்கான பெறுபேற்று அடைவினை ஊக்கப்படுத்துதல் தோழில் சந்தைக்கு ஏற்ப கல்வி தெரிவுகளையும் நிறுவன தெரிவுகளையும்

**ஆளிடைதொடர்பு மற்றும் குடும்பம்**

குடும்ப குழு கலந்துரையாடல்கள் மூலம் குடும்ப ஆதரவை ஏற்படுத்துதல்.

குடும்ப சூழலை இளைஞர்கள் கற்பதற்கு ஏற்றவாறுமாற்றியமைக்க வசதிப்படுத்தல்.

குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்த வசதிப்படுத்தல்.

இளைஞர்களின் முறைசார் மூன்றாம் நிலை கல்விக்கான

**சகபாடிகள்**

சகபாடிகள் தெரிவு மற்றும் மூன்றாம் நிலை கல்வியின் முக்கியதத்துவத்தை அறிவூட்டுதல்

சகபாடிகளின் ஆதரவு பொறிமுறையை வலுப்படுத்துதல்

**நிறுவனங்கள்**

கல்வி நிறுவனங்களின் இயலளவை மேம்படுத்துதல். கல்வி நிறுவனங்களுக்கும் தொழில் சந்தைக்கும் இடையிலான வலையமைப்பினை அதிகரித்தல் கல்வி செயற்பாடுகளை தொழில்சந்தையை மையமாக வைத்து ஒழுங்கமைக்க வசதிப்படுத்தல். பரீட்சை முறைகள் கலைத்திட்டங்களை காலத்திற்கு அமைய மாற்றி அமைக்க பரிந்துரைகளில் ஈடுபடுதல் இணைசேவைகளை வழங்க வசதிப்படுத்தல்

**சமுதாயம்**

மு.மூ.க தொடர்பான விழிப்புணர்வை சமுதாயத்திற்கு வழங்கல்

மு.மூ.க தொடர்பான வழிகாட்டல் சேவைகளை வழங்குதல்

மு.மூ.க வாய்ப்பிற்கான இளைஞர்களின் பங்கேற்பை அதிகரிப்பதற்கான ஆதரவை கோருதல்

**கொள்கைகள்**

கல்வி கொள்கைகளில் காணப்படும் முரண்பாடுகளை நீக்குதலும் தொழில் கொள்கைகளுக்கு ஏற்ப புதிய காலத்திற்கு ஏற்ற கல்வி கொள்கையை தோற்றுவித்தலும்.

கொள்கை பற்றிய தெளிவூட்டலை இளைஞர் மத்தியில் மேற்கொள்ளல்

முறைசார் மூன்றாம் நிலை கல்வியை மேம்படுத்தும் கொள்கைகளை

**ஆய்வின் அறிவு பகிர்வு**

ஆய்வு மாநாடுகளில் பகிர்ந்துகொள்ளல்.

சஞ்சிகைகளில் முறைசார் மூன்றாம் நிலை தகவல்களை கட்டுரையாக பகிர்தல்

சாதாரண மக்களுக்கு மு.மூ.க தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஊடாக புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு உள்ளூர்

## நிறைவுரை

இலங்கையில் மூன்றாம் நிலைக்கல்வியில் இளைஞர்களின் பங்கேற்பை அதிகரிப்பதற்கு, இவ் ஆய்வில் இளைஞர்கள் மூன்றாம் நிலை கல்வியில் எதிர்கொள்ளும் சவால்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் இளைஞர்கள் மூன்றாம் நிலைக்கல்வி வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதிலும் மூன்றாம் நிலை கல்வியை தொடர்வதிலும் மூன்றாம் நிலைக்கல்வியை நிறைவு செய்த பின்னரும் வெவ்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்வது ஆய்வின் மூலம் உறுதியாகிறதுடன் மூன்றாம் நிலை கல்வியில் இளைஞர்களின் பங்கேற்பில் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றி கொள்வதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆகவே ஆய்வின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான சமூகப்பணி தலையீடுகளை மேற்கொள்வதன் மூலமே சர்வதேச சந்தைக்கு ஏற்ப தொழிலாளர் போட்டித்தன்மையை மூன்றாம் நிலைக்கல்வி முறைமை மூலம் எதிர்கொள்ள இயலுமாக இருப்பதுடன் வளமுள்ள அறிவார்ந்த எதிர்கால சந்ததியை தோற்றுவிக்க வாய்ப்பு கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

**உசாத்துணை நூல்கள்**


Administrative Guide Book (2021), Zonal Education Office, Thenaradchchi, Chaakachcheri, Sri Lanka.

Ariyaratne Manoj(2020), The British Education System and the Cultural Dilemma : in the light of the Depiction in Early Sinhala Fictions, International Journals of Research and Innovation in Science,Vol. IV, Issue III

Balamurali.N & Dunasinghe .P(2016),Youth participation in the informal Labour Market: The case of the Northern Province of Sri Lanka, International Conference on Dry Zone Agriculture, Agriculture Extension, Sri Lanka.

Chandra Gunawardena (2017) Improving the Quality of university Education in Sri Lanka: an analysis of quality assurance Agency councils reviews, Sri Lanka journals of Social Science,Vol.40(1), June 2017

Chani imbulgoda (2019), Evolution of the quality assurance system: A study of the state university in Sri Lanka. 3rd Asutralia and New Zealand conference on Adance Research, Asia pacific Institute of Advance Research, Asutralia.

Dilini Lashika Ranasuriya and Sreemali, Herath (2020), A Need Analysis on the Language Skills Required by the Industry from Vocational Graduates, Sri Lanka Journal of Social Science, Vol.43,Issue no.02 pp85-98.

Hashini Silva (2017),A Social Work Intervention to the Economic Issues face by the single parent Mothers,,Sri Lanka Journal of Social Work, National Institute of Social Development. Sri Lanka, pp15-27.

Minuwangoda Gunawasa (2017), A Study of a few recognized Educational issues faced by Sri Lanka at present, forth Asia pacific conference on advanced Research, Asia Pacific Institute of Adance Research, Malbourne, March 2017.

Rasanjalee perera (2015), Impact of Female Higher Education in the age of marriage and marriage life in Sri Lanka, International Research Conference on Humanities and Social Science, University of Sri Jeyawardanepura, Sri Lanka, vol no.01